தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1982 பிப்ரவரி 9
தை 27, துன்மதி, திருவள்ளுவர் 2013.

ன்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் வ மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு வைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமை பேரவை கூடியது.

ண்புமிகு பேரவைத்தலைவர் :

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்''

ட்டங்களைச் செயல்படுத்தும் முறைகளை அறிந்து இருந் , அன்றைய உலகப் போக்கினை புரிந்து கொண்டு, அதற்கு வகையில் செயல்படுத்துவதே நல்லது.

1. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு.

ரு. மு. அம்பிகாபதி : சார், மாண்புமிகு பேரவைத் தலை வர்களே, பாலிடெக்னிக் மாணவர்கள் 12 பேர் மிகவும் ரமான நிலையில் பொது மருத்துவ மனையில் சேர்க்கப் இருக்கிறார்கள்......

ண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு ஐந்து நிமிட நேரத் முன்புதான் என்னுடைய அறையில் அறிவிப்புக் கொடுத்திர் அதற்குள்ளே கேட்டால், எப்படி இங்கே அனுமதிக்க முடி

ரு. மு. அம்பிகாபதி : அவர்கள் சீரியஸான கண்டிஷனில் றார்கள். 6 நாள் உண்ணாவிரதம் இருந்ததன் காரணமாக, ன் வாட்டர் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்....

ண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்குத் தேவை உதவிகளைச் செய்ய டாக்டர்களிடத்தில் சொல்ல வேண் இங்கே அவையில் அதைப் பற்றி எழுப்புவது முறையல்ல.

ரு. மு. அம்பிகாபதி : இங்கே கல்வி அமைச்சர் அவர்கள் றார்கள். அவர்கள் ஏதேனும் செய்வார்களோ என்று கிறேன்.

]1982 பிப்ரவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட நடைமுறைகளை நான் இங்கே அனுமதிப்பதற்கு இல்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் ஏதேனும் செய்ய வேண்டும் என்று விரும்பினால், அது குறித்து மாண்புமிகு அமைச்சரின் அறைக்கு நேரடியாகச் சென்று சொல்ல வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : நேற்று இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானம் விவாதிக்கின்றநேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாணவர்களைச் சந்தித்துப் பேசுவதாகச் சொன்னார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அந்த மாணவர்களைச் சந்தித்து பேசுவதாக நேற்றே இங்கு உறுதி மொழி கொடுத்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சந்தித்துப் பேசியது குறித்து இப்போது நாம் விவாதிக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் சந்தித்துப் பேசியதைக் குறித்து அறியவேண்டுமானால், அவருடைய அறையில் நேரில் சந்தித்துக் கேட்டுக் கொள்ளலாம். ஆகவே, எல்லா உறுப்பினர்களும் உட்கார வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) யிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்சப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம் (தொடர்ச்சி).

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்ட மன்றக் கூட்டவையில் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1982-ஆம் ஆண்டு கூட்டவையில் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையில் குறிப்பிடப்பட்டு இருப்பதைப் பார்க்கின்றபோது, சென்ற ஆண்டு உரை நிகழ்த்தியபோது வரலாற்றுச் சிறப்பு மிக்க உலகத் தமிழ்மாநாட்டை தமிழக அரசு நடத்தியதையும், அந்த சிறப்பான மாநாட்டுக்குப் பின்னால் இந்த ஆண்டு மகத்தான பாரதிக்கு நூற்றாண்டு விழா எடுத்து, அந்தக் கவிஞனுக்கு உலகம் புகழும் அளவிற்கு வரலாற்றிலேயே இடம் பெறும் அளவிற்கு இந்த ஆண்டு முழுவதும் பாரதி விழாவைக் கொண்டாட வேண்டும் என்று இந்த அரசு அறிவித்து இருப்பது உண்மையிலேயே பாராட்டுதற்குரியது. அதற்கு மேலும் கவர்னர் அவர்கள் உரையிலே ஏதாவது திட்டங்கள் அறிவித்து இருக்கிறார்களா என்று சொன்னால், இந்த ஓராண்டு இடைவெளியில் வரலாற்று சிறப்புமிக்க உலகத் தமிழ் மாநாட்டையும், அதற்குப் பின்னால் மகாகவி பாரதிக்கு விழா எடுத்து இருக்கிறோம் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.